Private Circulation / Monthly-Tamil (Aug 2015)

# WINDCARE Chronicle

Praise the Lord

Touching you with Special Technology!

VOLUME : 06
ISSUE : 07
Released on September 2015

NEWS | INFORMATION | TECHNICAL | ARTICLES | ACHIEVEMENTS

With GOD's care
all things are Possible...



www.windcareindia.com

An ISO 9001:2008 Certified Organization

## Our Services

- Turnkey Project.
- Consultancy.
- Operation & Maintenance.
- Erection by without Crane.
- Grid and off grid Solar.
- Small Wind Turbines.
- UPS & Solar sales.

## Our Vision

To ensure our customers
- total quality service.

To spread globally and
- export our quality service.

## Our Mission

With God's care all things are Possible. provides energy to make an impeccable and incredible mark in our domain.

## Our Group Companies

**Windcare India Pvt. Ltd,**
Gudimangalam.
**Windcare Technologies.**
Gudimangalam.
**Redefine Energy Pvt. Ltd,**
(Rajasthan).
**Windcare Lanka Pvt. Ltd,**
(Sri Lanka).
**Enercare Co. Ltd,**
(Thailand).
**Solarcare India Pvt. Ltd**
Gudimangalam
**Viento Que Philippines inc,**
(Philippines).

**Corp. Office:**
3/336, Pollachi Road,
Gudimangalam - 642 201,
Udumalpet Tk., Tirupur Dist,
Tamil Nadu
**Tel: 04252 273840**



S. Antonyraj
CEO, Windcare.

அன்புக்குரியவர்களே வாழ்த்துக்கள்.

உங்களை இந்த செப்டம்பர் மாத இதழ் வழியாக சந்திப்பதில் மகிழ்ச்சி.

**"வாழ்வில் நம்பிக்கை ஒளியேற்றுவோம்"** - இந்த உலக வாழ்வின் சிறப்பு, தன்னில், பிறரில், குடும்ப மற்றும் சமூக வாழ்வில் நாம் ஒரு நம்பிக்கை அளிப்பவனாக வாழ்வதே ஆகும்.

ஆம் ஆகஸ்ட் 30ம் தேதி கொடைக்கானலில் நடைபெற்ற பிலிப்பைன்ஸின் **Project Team Refresh meet**-ல் நம் சகோதரர்கள் தங்கள் **Project** மற்றும் பயண அனுபவம் தனக்கு மட்டுமல்லாமல், தங்கள் குடும்பம் மற்றும் தாங்கள் சார்ந்துள்ள சமூகத்தில் **தன்னை ஒரு நம்பிக்கையுள்ளவனாக** வெளிப்படுத்துவதாக அமைந்தது என்று மிகுந்த மனநிறைவோடு பகிர்ந்துகொண்டார்கள்.

ஆம் பிலிப்பைன்ஸ் **Project** அனுபவம் நம் நிறுவனத்தின் அனைத்து பணியாளர்கள் மத்தியில், **புதிய நம்பிக்கையை** உருவாக்கியுள்ளது. மேலும் கடந்த மாதம் ஆப்பரிக்க கண்டத்தில் உள்ள **ஜாம்பியா** என்னும் நாட்டிற்கு நானும் சோலார்கேர் மேனேஜர் திரு.S.சிவக்குமார் அவர்களும் **Solar Project** ஆய்வு பணிக்காக சென்று வந்துள்ளோம். புதிய பணி வாய்ப்புகள் நம்முன்பாக உள்ளது.

குறிப்பாக **Spl Team** பணிதளங்களில் **Quality** மற்றும் **Safety Development**-க்காக பல்வேறு புதிய உக்தி கையாளப்பட்டு வருகிறது. இந்த செயல்பாடு பாதுகாப்பு அளவை அதிகரித்து, நமக்கும் நமது வாடிக்கையாளர்களுக்கும், நாம் ஒரு தரமான செயல்பாட்டு நிறுவனம் என்ற **நம்பிக்கையை** ஏற்படுத்துவதே நோக்கம்.

பல்வேறு பணிவாய்ப்புகள் நம் முன் உள்ளன, குறிப்பாக மொரிஷியஸ் நாட்டில் காற்றாலை நிறுவும் பணி உள்பட, ஆம், இவை மீண்டும் ஆக்கப்பூர்வமாய் செயல்பட நமக்கு நம்பிக்கையூட்டுகிறது. இனைந்து செயல்படுவோம், **நம்பிக்கையூட்டுவோம்.** அதுவே வெற்றியின் அடையாளம்.

எல்லாம் வல்ல இறைவன் நம்மை சிறப்பாய் ஆசீர்வதிப்பாராக...

அன்புடன்

S.அந்தோனிராஜ், CEO

WINDCARE INDIA PVT. LTD | Solarcare | Infracare | VQP

Editor : S.Krishnamoorthy, HR Executive, email - chronicle@windcareindia.com

நமது சிந்தனைக்கு...

## சாந்தத்தின் வல்லமை

நயாகரா நீர்வீழ்ச்சி, நான் கண்ட காட்சிகள் யாவற்றிலும் மிகவும் கண்ணைக் கவரும் காட்சியாகும். 6 மில்லியன் கன அடி தண்ணீர் ஒவ்வொரு நிமிடமும் ஓடிவந்து விழும்போது உண்டாகும் இரைச்சலே.

இதை வட அமெரிக்காவிலுள்ள ஆற்றல் மிக்கதொரு நீர்வீழ்ச்சியாக்குகிறது. ஆற்றின் 50% தண்ணீர் நீர் வீழ்ச்சிகளை அடையுமுன்பே, 4 பெரிய சுரங்கப் பாதைகள் வழியாகத் திசை திருப்பி விடப்படுகின்றன என்பதை வெகு சிலரே அறிவர். இந்த நீரானது, நீர் மின்சார சுழலிகள் மூலம் செலுத்தப்பட்டு, அதனால் உண்டாகும் சக்தி அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா இவற்றின் பகுதிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. பின் நீர்வீழ்ச்சியைத் தாண்டி, அந்த நீர் ஆற்றுக்குத் திரும்புகிறது.

தங்களுடைய வாழ்க்கையை, நயாகரா நீர்வீழ்ச்சியைப் போல மனம் போனபடி செயல்படும், கண்ணைக் கவரும், பகட்டானதொரு வாழ்க்கையாகப் பிறர் நினைக்க வேண்டும் என்று, சிலர் விரும்புகின்றனர். ஆனால் அடக்கப்படாத சக்தி உபயோகமற்ற ஆற்றலாக வீணாகிறது.

தனது அரச அதிகாரத்தைக் கொண்டு, கர்த்தருடைய மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க முடியும் என்று மோசே எண்ணினார். ஓர் எகிப்தியனைக் கொன்றதனால், அவர் தன்னுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தார். அதன் மூலம் தன் அதிகாரத்தை வீணாக்கி, தன் சொந்த மக்களுடைய மரியாதையை இழந்தார். (யாத்திராகமம் 2:11-15) கர்த்தர் அவனுக்குச் சாந்தத்தைக் கற்பிக்க வேண்டியிருந்தது (எண்ணாகமம் 12:3)

சாந்த குணமுள்ளவர்கள் தங்கள் அதிகாரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதனால் அவர்கள் தழைக்கிறார்கள். நம்முடைய ஆண்டவர் சொல்கிறதாவது, சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள். (மத்தேயு 5:5). நீங்கள் இந்த உலகில் உங்கள் சுயசக்தியினால் வாழ முயன்று கொண்டிருக்கலாம். கர்த்தர் உங்களுக்குச் சாந்த குணத்தை கற்பித்து, அவருடைய பெலத்தில் சார்ந்திருக்கும் வாழ்க்கையை உங்களுக்கு அருளுவாராக!

கர்த்தருடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பலமே சிறந்த பலம்.

**வேதாகமப் பகுதி :**

அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும் - **ஏசாயா 30:15**

## டிசைன் இஞ்னியரிங் (Design Engineering)

**CLIFTON** நிறுவனத்திற்காக 200 கிலோவாட் சோலார் பவர் பிளான்ட் அமைப்பதற்கான **MMS (Module Mounting Structure)** டிசைன் பணி.

**VESTAS** நிறுவனத்திற்கான பேக்டரி (Factory) shed Construction டிசைன் பணி.

**GE** காற்றாலைக்குரிய சிலிங்பாஸ்கட் ரீப்பிளேஸ்மென்ட் (Sling Basket Replacement) பணிக்கான டிசைன் பணி நடைபெற்றுவருகிறது.

எலக்ட்ரிக்கல் வின்ஞ் (Electric Winch Design) டிசைனுக்கு **CE** சர்ட்டிபிக்கேஷன் பெறுவதற்கான பணி நடைபெற்று வருகிறது.

காற்றாலையின் பிளேடு பராமரிப்புக்கான பிளாட்பார்மிற்கு (Blade Platform) **CE** சர்ட்டிபிக்கேஷனுக்குரிய பணி நடைபெற்று வருகிறது.

**GAMESA 2** மெகாவாட் காற்றாலையின் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றுவதற்குரிய ஸ்டரக்சர் டிசைன் பணி.(**Replacement structure Design**)

**GAMESA 2** மெகாவாட் காற்றாலையின் பிளேடு சிலிங்பாஸ்கட் மாற்றியமைப்பதற்கான ஸ்டரக்சர் டிசைன் (**structure Design**) பணி நடைபெற்று வருகிறது.

## பணிமனையிலிருந்து (PRODUCTION DIVISION)

அக்ஷயா பொறியியல் கல்லூரியின் 100 கிலோவாட் சோலார் பவர்பிளான்ட்டிற்கான **MMS** பேப்ரிக்கேஷன் பணிகள் நிறைவுபெற்றுள்ளது.

**GAMESA 2** மெகாவாட் காற்றாலையின் பிட்ச் சிலிண்டர் ரிப்பேர் பணிக்குரிய பேப்ரிக்கேஷன் பணிகள் நிறைவு பெற்றுள்ளது.

**CLIFTON** நிறுவனத்தின் 200 கிலோவாட் சோலார் பவர் பிளான்ட்டிற்குரிய **MMS** பேப்ரிக்கேஷன் பணி நிறைவு பெற்றுள்ளது.

**Radianz Energy** நிறுவனத்திற்கு உயர்கோபுர மின் தெருவிளக்கு (**High mast street light**) அமைத்தலுக்குரிய பேப்ரிக்கேஷன் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

போனஸ் காற்றாலை அருகே பிரம்மான்டமான பணிமனை கட்டப்பட்டு வருகிறது. அதனுடைய மேற்கூரை அமைப்பதற்கான பேப்ரிக்கேஷன் பணிகள் நடைபெற்று வருகிறது.

**GAMESA 2** மெகாவாட் காற்றாலையின் சிலிங் பாஸ்கட் மாற்றியமைத்தலுக்குரிய ஸ்ட்ரக்சர் பேப்பிரிக்கேஷன் பணிகள் நடைபெற்று வருகிறது.

## அச்சீவ்மென்ட்

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் பல்வேறு பணித்தளங்களில் தமிழ்நாடு மற்றும் வெளிமாநிலங்களில் நம்முடைய வித்தவுட் கிரேன் டெக்னாலாஜி உக்தியை பயன்படுத்தி செய்யப்பட்ட பணிகள்




தென்காசி தேவர்குளம் பணித்தளத்தில் **SUZLON 2.1** மெகாவாட் காற்றாலையின் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றுதல் பணி நடைபெற்றது.

நாகர்கோவில் பணகுடி பணித்தளத்தில் **RRB 500** கிலோவாட் காற்றாலையின் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றும் பணி நடைபெற்றது.

கோயமுத்தூர் காட்டம்பட்டி பணித்தளத்தில் **SUZLON 1.5** மெகாவாட் காற்றாலையில் பிளேடு பியரிங் மாற்றியமைத்தல் பணி நடைபெற்றது.

கோயமுத்தூர் சந்திராபுரம் பணித்தளத்தில் **NEPC 400** கிலோவாட் காற்றாலையின் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றுதல் பணி நடைபெற்றது.



கோயமுத்தூர் சத்திரம் பணித்தளத்தில் **NEPC 750** கிலோவாட் காற்றாலையின் கியர்பாக்ஸ், ரோட்டார் இறக்கி ஏற்றுதல் பணி நடைபெற்றது.



மஹாராஸ்டிரா அவுன்த் பணித்தளத்தில் **RRB 500** கிலோவாட் காற்றாலையில் அன்பேலன்ஸ் ரோட்டார் இறக்கி ஏற்றும் பணி நடைபெற்றது.

மஹாராஸ்டிரா தேபாவாடி பணித்தளத்தில் **VESTAS 1.65** மெகாவாட் காற்றாலையில் சிங்கில் பிளேடு & பியரிங் ரீப்ளேஸ்மென்ட் பணி நடைபெற்றது.

மஹாராஸ்டிரா கராடு பணித்தளத்தில் SUZLON 1.25 மெகாவாட் காற்றாலையில் அன்பேலன்ஸ் ரோட்டார் ரீ பொஸிஷன் அமைத்தல் பணி நடைபெற்றது.



குஜராத் ராஜ்கோட் பணித்தளத்தில் SUZLON 2.1 மெகாவாட் காற்றாலையில் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றுதல் பணி நடைபெற்றது.

மஹாராஸ்டிரா சாங்கிலி பணித்தளத்தில் SUZLON 1.5 மெகாவாட் காற்றாலையில் கியர்பாக்ஸ் இறக்கி ஏற்றுதல் பணி நடைபெற்றது.

கர்நாடகா கப்பத்துக்கூட பணித்தளத்தில் SUZLON 1.25 மெகாவாட் காற்றாலையின் சிங்கில் பிளேடு இறக்கி ஏற்றுதல் பணி நடைபெற்றது.



இராஜஸ்தான் ஜெய்ஷல்மெர் பணித்தளத்தில் SUZLON 2.1 மெகாவாட் காற்றாலையின் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றுதல் பணி நடைபெற்றது.

குஜராத் நலியா பணித்தளத்தில் SUZLON 1.5 மெகாவாட் காற்றாலையில் சிலிவெரிங் ரீப்ளேஸ்மென்ட் பணி நடைபெற்றது.

கர்நாடகா சித்திரதுர்கா பணித்தளத்தில் SUZLON 2.1 மெகாவாட் காற்றாலையின் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றுதல் பணி நடைபெற்றது.

மத்தியபிரதேசம் தேவாஸ் பணித்தளத்தில் GAMESA 2 மெகாவாட் காற்றாலைகள் அமைக்கும் பணி நடைபெற்றது.

## நடப்பு பணிகள்

- தென்காசி தேவர்குளம் பணித்தளத்தில் SUZLON 2.1 மெகாவாட் காற்றாலையில் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றும் பணி
- மத்தியபிரதேசம் ஜேவ்ரா பணித்தளத்தில் NEPC 750 கிலோவாட் காற்றாலையில் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றும் பணி
- கர்நாடகா ஜெய்கல்கூடா பணித்தளத்தில் SUZLON 1.25 மெகாவாட் காற்றாலையில் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றும் பணி
- மஹாராஸ்டிரா நந்துர்பார் பணித்தளத்தில் SUZLON 1.25 மெகாவாட் காற்றாலையில் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றும் பணி
- குஜராத் நலியா பணித்தளத்தில் SUZLON 600 கிலோவாட் காற்றாலையில் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றும் பணி
- ஆந்திரா கன்டிகோட்டா பணித்தளத்தில் SUZLON 2.1 மெகாவாட் காற்றாலையில் ஜெனரேட்டர் இறக்கி ஏற்றும் பணி

மேற்காணும் அனைத்து பணிகளும் வித்தவுட் கிரேன் டெக்னாலாஜியில் நடைபெற்று வருகின்றன.

## சோலார்கேரிலிருந்து...

10 கிலோவாட் சோலார் பவர் பிளான்ட் மகாராஸ்டிரா மாநிலத்தில் உள்ள சர்லா பைபர் நிறுவனத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது.



5 கிலோவாட்டில் சோலார் பவர் பிளான்ட் நாகபட்டிணத்தில் உள்ள V.S.லாட்ஜிற்கு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது.



திருப்பூர் முத்துச்சாமி அவர்களுடைய விவசாய பயன்பாட்டிற்கு அவரது தோட்டத்தில் 3HP சோலார் வாட்டர் பம்ப் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் வேலவன் நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்ற 9.8.2015 முதல் 11.09.2015 வரை 3 நாட்கள் நடைபெற்ற KNIT SHOW-வில் கலந்துகொண்டது.



சோலார் பயன்பாடுகளில் புதிய உக்திகளை கையாள்வதற்கான புதிய முயற்சியின் ஆரம்பமாக **ஜாம்பியா** நாட்டிற்கு சென்று ஆராய்ச்சி செய்தது.

அந்தியூர் மற்றும் கோபிச்செட்டிபாளையம் சுற்றுவட்டார விவசாய பெருமக்களுக்கும் அப்பகுதி பொறியாளர்களுக்கும் நமது குழுவினர், சோலார் மூலமாக முற்றிலும் இயங்கக்கூடிய வாட்டர் பம்ப் பிளான்ட்டை அமைத்து, அவர்களுக்கு செயல்முறை விளக்கம் கொடுக்கப்பட்டது.

## சோலார் நடப்பு பணிகள்

கிணத்துக்கடவு அக்ஷயா பொறியியல் கல்லூரிக்கு 100 கிலோவாட்டில் சோலார் பவர் பிளான்ட் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

திருப்பூர் CLIFTON நிறுவனத்திற்கு 300 கிலோவாட்டில் சோலார் பவர் பிளான்ட் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

உயர்கோபுர மின்விளக்குகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் 7 புதிய ஆர்டர்கள் கிடைத்துள்ளது.

## சோலாரில் புதிய பணி வாய்ப்பு

- திருப்பூர் மெஜஸ்டிக் பின்னலாடை ஏற்றுமதி நிறுவனத்திற்கு 50 கிலோவாட்டில் சோலார் பவர் பிளான்ட் அமைக்கும் பணி
- திருப்பூர் மைல்ஸ்டோன்ஸ் ஓவர்சீஸ் நிறுவனத்திற்கு 50 கிலோவாட்டில் சோலார் பவர்பிளான்ட் அமைக்கும் பணி
- கீதாலாயா ஏற்றுமதி நிறுவனத்திற்கு 50 கிலோவாட்டில் சோலார் பவர் பிளான்ட் அமைக்கும் பணி.

## சாட்சிகள் - பிலிப்பைன்ஸ் பணியாளர்கள்

கடந்த ஒருவருடமாக பிலிப்பைன்ஸ் நாட்டில் கமேஸா 2 மெகாவாட் காற்றாலைகள் நிறுவும் பணியை மிகச் சிறப்பாக குறிப்பிட்ட காலத்திற்குள் துரிதமாகவும், நேர்த்தியாகவும் பணிகளை நிறைவு செய்தார்கள். இதனால் நமது நிறுவனத்திற்கு மிகப்பெரிய பாராட்டு கமேஸா நிறுவனத்திலிருந்து கிடைக்கப்பெற்றது. ஆகவே இப்பணியில் ஈடுபட்ட அனைத்து பணியாளர்களையும் கௌரவிக்கும் வகையில் கொடைக்கானல் Country கிளப்பில் ஒரு சிறப்பு கூடுகை ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கூடுகையில் பணியாளர்கள் ஒவ்வொருவரும் தன்னுடைய பிலிப்பைன்ஸ் ப்ராஜக்ட் அனுபவத்தை பகிர்ந்துகொண்டார்கள். பிலிப்பைன்ஸ் ப்ராஜக்ட் ஒவ்வொருவருக்கும் தனக்கும் தான் சார்ந்திருக்கும் குடும்பம், சமுதாயம் ஆகியவற்றில் என்னை உயர்த்தி உள்ளது என மகிழ்ந்து களிகூர்ந்தார்கள். அவற்றில் சிலவற்றை உங்களோடு பகிர்ந்துகொள்கிறோம்.



**P.பிரபுராஜ் – பாதுகாப்புத்துறை**



நான் வின்ட்கேர் நிறுவனத்தில் சேர்ந்து 1 வருடம் தற்போது நிறைவு பெற்றுள்ளது. எனக்கும் என்னுடைய அப்பாவிற்கும் ஒரு சின்ன விவாதத்தினால் கடந்த 6 வருடங்களாக பேச்சுவார்த்தை கிடையாது. ஆனால் நான் வின்ட்கேரில் சேர்ந்த 4வது மாதத்தில் பிலிப்பைன்ஸ் ப்ராஜக்ட்டிற்கு தேர்வானபோது மிகுந்த மகிழ்சி. என்னை பொறுப்புள்ளவனாக மாற்றியது வின்ட்கேர் மற்றும் பிலிப்பைன்ஸ் பணித்தளம். இதுவே என்னுடைய அப்பா மீண்டும் என்னுடன் பேசுவதற்கு உதவியது. வின்ட்கேர் நிறுவனம் மற்றும் VQP நிறுவனத்திற்கும் நன்றி.

**N.கண்ணன் – ஸ்பெஷல் டீம்**



நான் நமது நிறுவனத்தில் 5 வருடங்களில் பல்வேறு பணித்தளங்களில் பணியாற்றி வந்துள்ளேன். 3 முறை நமது நிறுவனத்தின் பணிக்காக வெளிநாடு சென்று வந்துள்ளேன். நான் ஒவ்வொரு முறை வெளிநாடு சென்று வரும்போது என்னுடைய குடும்பத்திற்கு அது மிகப்பெரிய சந்தோஷத்தை கொடுத்தது. இந்தமுறை நான் பிலிப்பைன்ஸ் ப்ராஜக்ட்டிற்கு சென்றதால் என் அக்காவின் மகள் திருமணம் மற்றும் எங்கள் குடும்ப கடன் முழுவதையும் அடைப்பதற்கு உதவியது. இப்படி என்னை ஒவ்வொரு தடவையும், என்குடும்பத்திலும் என்குடும்ப உறுப்பினர்கள் மத்தியிலும் எனக்கு மிகுந்த உயர்வை கொடுத்தது. எனக்கு என்மேல் நம்பிக்கை கிடைத்தது. நான் வின்ட்கேர் நிறுவனத்தையும், உழைப்பையும் நம்பினேன். நிறுவனம் என்னை கைவிடவில்லை. இப்பெருமை நான் சார்ந்திருக்கும் வின்ட்கேருக்கே உரியது. நன்றி.

**த.பிளஸ்ஸோ தாமஸ் – ஸ்பெஷல் டீம்**



நான் கடந்த ஒரு வருடமாக வின்ட்கேர் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய தன்னமிக்கை இந்நிறுவனத்தில் பணிபுரிவதால் முன்னேறி உள்ளது. நான் பிலிப்பைன்ஸில் பணிபுரிந்த காலங்கள் என்வாழ் நாளில் திருப்பு முனையாக அமைந்த நாட்கள். என்னுடைய கேரியர் நன்றாகவே உள்ளது. மிகவும் முக்கியமாக என்பெற்றோர் என் மீது நம்பிக்கை வைக்க ஆரம்பித்துள்ளார்கள். எனக்கு இந்த வாய்ப்பினை தந்த அத்தனை நல்உள்ளங்களுக்கும் நன்றி.

**G.ஞானவேல் – ஸ்பெஷல் டீம்**



நான் இரண்டு வருடங்களாக வின்ட்கேர் நிறுவனத்தின் ஸ்பெஷல் வொர்க் பணிகளை செய்து வருகிறேன். முதல் தடவையாக நான் ஸ்ரீலங்கா தேசத்திற்கு சென்று வந்தபொழுது என்னுடைய தங்கைக்கு திருமணம் செய்து வைக்கவும், இரண்டாவது முறையாக பிலிப்பைன்ஸில் காற்றாலை நிறுவும் பணிக்கு சென்று வந்தபோது என்னுடைய வீட்டை கட்டுவதற்கு உதவியது. எனக்கும் என்குடும்பத்திற்கும் சமூதாயத்தில் ஓர் அங்கீகாரம் கிடைக்க உதவியது நான் பணிபுரியும் வின்ட்கேர் நிறுவனமே. என்நிறுவனத்திற்கு நன்றி.

இவ்வாறு அனைத்து பணியாளர்களும் தங்களுடைய அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்கள். நிறுவனத்தின் சார்பில் பணியாளர்கள் அனைவருக்கும் நினைவுப்பரிசும், சான்றிதழ் கொடுத்து கௌரவிக்கப்பட்டார்கள்.

## சுதந்திர தின விழா



நம்முடைய தலைமை அலுவலகத்தில் 69வது சுதந்திர தினத்தை வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. நமது சிறப்பு அழைப்பாளரான திரு.N.E.அப்பாசாமி அவர்கள் (நமது நிறுவனத்த்தில் அலுவலக மேலாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்) விழாவிற்கு தலைமையேற்று நமது தேசத்தின் முவர்ண தேசியக்கொடி ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்கள்.

கொடி ஏற்றப்பட்டபின் பணியாளர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள். தேசியகீதம் பாடலை அனைவரும் பாடி தேசியக்கொடிக்கும், நமக்கு சுதந்திரம் கிடைக்க உயிர்நீத்த சுதந்திரப்போராட்ட தியாகிகளுக்கு மவுனஅஞ்சலி செலுத்தப்பட்டது. விழாவின் இறுதியில் நமது நிறுவனத்தின் இயக்குநர் திரு.S.அந்தோனிராஜ் அவர்கள் மதுவினால் இன்றைய இளைஞர்கள் மற்றும் சமுதாயம் எவ்வாறு சீரழிகிறது என்பதை குறித்தும், நாம் மட்டும் நல்லவர்களாய் வாழ்வதைவிட நம்மோடு இருபவர்களையும் நல்வழி காட்டுவதே மனிதன் என பேசினார்கள். விழாவின் முடிவாக ஒருவாருக்கொருவர் வாழ்த்துக்களையும் இனிப்புகளையும் பகிர்ந்துகொண்டார்கள். வந்தே மாதரம். ஜெய்ஹிந்!!!

## வாலையாரில் சோலார்கேர் ...

கடந்த ஆகஸ்ட் 4 மற்றும் 5 ஆகிய நாட்களில் சோலார்கேர் பணியாளர்களுக்கு Refresh meet வாலையார் Country கிளப்பில் நடந்தது. இந்த அவுட்டோர் கூடுகையில் பணியாளர்களின்



தனித்திறமை, கூட்டுமுயற்சி, நிறுவனத்தின் தொலைநோக்கு சிந்தனை போன்றவைகள் பற்றிய கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள். மேலும் உடலுக்கும் உள்ளத்திற்கும் புத்துணர்ச்சி தருகிற சிந்தனை தூண்டல் போன்ற விளையாட்டுப்போட்டிகளும் நடத்தப்பட்டன. கூடுகையின் இறுதியில் கலந்து கொண்ட பணியாளர்கள் இந்த கூடுகையின் மூலம் நாங்கள் எங்களையே நன்றாக அறிந்துகொள்ளவும், நாம் இனி என்ன செய்யவேண்டும் என்ற எண்ணத்தையும் தந்தது என்று தங்களுடைய அனுபவத்தை பகிர்ந்துகொண்டார்கள்.

## வின்ட்கேர் வாலிபால் லீக் திருவிழா

பணியாளர்களின் தனித்திறமைகள் வெளிப்பட வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 25ம் தேதி கிரிக்கெட் லீக் போட்டிகள் நடந்தப்பட்டன. பணியாளர்கள் அனைவரும் பங்குபெற்றார்கள். முதலாவது கிரிக்கெட் லீக் மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. அதன் தொடர்ச்சியாக வின்ட்கேர் வாலிபால் லீக் போட்டி கடந்த மாதம் நடைபெற்றது.

இந்த வாலிபால் லீக் போட்டிக்களில் பங்குபெற பல்வேறு பணித்தளங்களில் இருந்து 12 அணிகள் தேர்வு செய்யப்பட்டன. தேர்வு செய்யப்பட்ட 12 அணிகளுக்கிடையே லீக் போட்டிகள் நடைபெற்றன. லீக்போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கால் இறுதி போட்டிகள் நடைபெற்றன.

கால் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு சீட்டக் வாரியர்ஸ் (வெகிக்கிள் மற்றும் ஸ்டோர்ஸ்), கியர்பாக்ஸ் (ஸ்பெஷல் டீம்),



கிரீன்ஹவுஸ் (சோலார்) மற்றும் காவல்கிணறு (ஸ்பெஷல் டீம்) அணிகள் தகுதிபெற்றன். கடந்த 22.08.2015 சனிக்கிழமை நடைபெற்ற அரையிறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு சீட்டக் வாரியர்ஸ் மற்றும் கிரீன்ஹவுஸ் அணிகள் தகுதிபெற்றன.

மாலையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் சோலார் துறையின் கிரீன்ஹவுஸ் அணி வெற்றி பெற்றன. வெற்றி பெற்று முதல் மற்றும் இரண்டாம் இடம் வந்த அணிகளுக்கு வெற்றிக்கோப்பைகளையும், சான்றிதழ்களையும் சுஸ்லான் நிறுவனத்தின் தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலத்தின் ஆப்ரேஷன் மற்றும் மெயின்டனன்ஸ் துறையின் தலைவர் திரு.முருகானந்தம் அவர்கள் வழங்கினார்கள். தேசியகீதத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.



## தெரிந்து கொள்வோம்

**முலாம் பழம் நன்மைகள் :** நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும். கல்லீரல் கோளாறுகளை போக்கும் தன்மை இதற்கு உண்டு. பித்தத்தை மொத்தமாக அகற்றும். சரும நோய்க்கு எளிய இயற்கைமருந்து. இப்பழத்தை சதையுடன் தேன் கலந்து உண்டுவர வாய்ப்புண், தொண்டைப்புண் குணமாகும். கண்பார்வையை அதிகரிக்கும் சக்தி இதற்கு உண்டு. உடலுக்கு வலுவை தரும். இதன் பழத்தின் சதையை பயன்படுத்தி சர்பத் செய்து குடித்துவர உடலுக்கு குளிர்ச்சி ஏற்படும். கோடை நோய்கள் வராமல் காக்கும். சிறுநீரக கோளாறுகளை சீர் செய்யும். அஜீரணத்தை அகற்றி பசியை ஏற்படுத்தும்.

– திருமதி. ஜெஸ்டின் ஜெயந்தி அந்தோனிராஜ், வின்ட்கேர் நிர்வாக இயக்குநர்.